தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 16, வியாழக்கிழமை.

மாசி 5, விபவ—திருவள்ளுவர் ஆண்டு—2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் நடையை ஆராய்ந்த நன்மை உடையவர் அவையின் செவ்வியை ஆராய்ந்து நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. பேரவையில் திருக்குறள் வணக்கம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அவைக்கு வந்து தங்களுடைய இருக்கையிலே நின்று குறளை படித்துப் பொருள் சொல்லி முடிக்கிறவரையில் உறுப்பினர்களும் எழுந்து நின்று அந்தக் குறளைக் கவனமாகக் கேட்டு மரியாதை செலுத்துவது இன்னும் மாண்புள்ள செயலாக இருக்கும். அதைத் தாங்கள் ஏற்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோள் அனைவராலும் ஏற்கக் கூடிய ஒன்று. எனவே நாளையிலிருந்து குறள் படிக்கும் போதும் உரை படிக்கும்போதும் அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவரும் எழுந்து நின்று மதிப் பளிப்பது உலகம் அனைத்துக்கும் தருகிற மதிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி).